www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 8

தேர்வு எண் 0 0 8 1 1 3

# ஆண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

## தமிழ்

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 15X1=15

1. இயற்கையைப் போற்றுதல் தமிழர் --------
   (அ) மரபு (ஆ) பொழுது (இ) வரவு (ஈ) தகவு
2. புகழாலும் பழியாலும் அறியப்படுவது --------
   (அ) அடக்கமுடைமை (ஆ) நாணுடைமை (இ) நடுவு நிலைமை (ஈ) பொருளுடைமை
3. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் -------- எனப்படும்.
   (அ) முற்று (ஆ) எச்சம் (இ) முற்றெச்சம் (ஈ) வினையெச்சம்
4. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தனை ----------
   (அ) கல்வெட்டுகள் (ஆ) செப்பேடுகள் (இ) பனையோலைகள் (ஈ) மண்பாண்டங்கள்
5. வானில் முழுநிலவு அழகாகத் -------- அளித்தது.
   (அ) தயவு (ஆ) தரிசனம் (இ) துணிவு (ஈ) தயக்கம்
6. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ---------
   (அ) பாரதிதாசன் (ஆ) தந்தை பெரியார் (இ) வ.உ. சிதம்பரனார் (ஈ) பெருஞ்சித்திரனார்
7. அரசரை அவரது -------- காப்பாற்றும்.
   (அ) செங்கோல் (ஆ) வெண்கொற்றக்குடை (இ) குற்றமற்ற ஆட்சி (ஈ) படை வலிமை
8. விகாரப் புணர்ச்சி --------- வகைப்படும்.
   (அ) ஐந்து (ஆ) நான்கு (இ) மூன்று (ஈ) இரண்டு
9. நீலகேசி கூறும் நோயின் வகைகள் --------
   (அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு (ஈ) ஐந்து
10. அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு -------- விருது வழங்கியது.
    (அ) பத்மஸ்ரீ (ஆ) பாரத ரத்னா (இ) பத்மவிபூசன் (ஈ) பத்மபூசன்
11. 'வருக' – வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லைத் தேர்க.
    (அ) வா (ஆ) பேசு (இ) நட (ஈ) தா
12. அயோத்திதாசர் நடத்திய இதழ் ---------
    (அ) ஒரு பைசாத் தமிழன் (ஆ) காலணாத் தமிழன்
    (இ) அரைப்பைசாத் தமிழன் (ஈ) அரையணாத் தமிழன்
13. 'ஆயிரங்காலத்துப் பயிர்' – மரபுத்தொடர் உணர்த்தும் பொருளைத் தேர்க.
    (அ) ஆராய்ந்து பாராமல் (ஆ) நீண்டகாலமாக இருப்பது
    (இ) இயலாத செயல் (ஈ) விரைந்து வெளியேறுதல்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

*இங்கே இருப்பது சில காலம்*
*இதற்குள் ஏனோ அகம்பாவம்*
*இதனால் உண்டோ ஒரு லாபம் – இதை*
*எண்ணிப்பாரு தெளிவாகும்!*

14. இப்பாடலின் ஆசிரியர் --------
    அ) குமரகுருபரர் (ஆ) சுந்தரர் (இ) நல்லந்துவனார் (ஈ) ஆலங்குடி சோமு
15. 'தடம்' என்பதன் பொருள் --------
    அ) செருக்கு ஆ) அணிகலன் இ) அடையாளம் ஈ) துன்பம்

**பொருத்துக.** 4x1=4

16. வெண்பா – துள்ளல் ஓசை
17. ஆசிரியப்பா – செப்பலோசை
18. கலிப்பா – தூங்கலோசை
19. வஞ்சிப்பா – அகவலோசை

### பகுதி – II பிரிவு – 1

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 6X2=12

20. ஓவிய எழுத்து என்றால் என்ன?
21. யாருக்கு அழகுசெய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
22. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?
23. எம்.ஜி. ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கினை எழுதுக.
24. நோயின் மூன்று வகைகள் யாவை?
25. சான்றோர்க்கு அழகாவது எது?
26. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
27. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பிரிவு – 2

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக. 6X2=12

28. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

29. தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.

அ) பூக்கள் நிறைந்த இடம் சோலையாகும்

ஆ) தமிழ் மொழி செம்மையானது வலிமையானது இளமையானது

30. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

31. கலைச்சொல் எழுதுக.

அ) PUNCTUATION – ஆ) INTEGRITY –

32. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.

33. பள்ளியிலும் வீட்டிலும் உன்னுடைய பொறுப்புகள் இரண்டனை எழுதுக.

34. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

35. தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.

அ) முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள்.

ஆ) நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்?

பகுதி – III பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2X3=6

36. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

37. மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.

38. மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2X3=6

39. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

40. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

41. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

ஒரு மனிதன் அறிவு வளர்ச்சிபெற வேண்டுமானால், கல்வி அறிவு அவசியம் என்று அயோத்திதாசர் கருதினார். நிலவு நாளும் வளர்ந்து முழுநிலவாகி ஒளிவீசுவதுபோல் கல்வி நிறுவனங்களில் அறிவை வளர்க்கும் நூல்கள் கற்பிக்கப்பட வேண்டும்; கல்வியோடு கைத்தொழில், வேளாண்மை, தையல் போன்றவற்றையும் கற்க வேண்டும் என்று இவர் வலியுறுத்தினார். சங்ககாலப் பெண்களைப் போலவே, இக்காலப் பெண்களும், கல்வி கற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் என்றும் இவர் எடுத்துரைத்தார்.

அ) கல்வியறிவு குறித்து அயோத்திதாசர் கருத்து யாது?

ஆ) கல்வியோடு எவை எவை கற்க வேண்டும் என்று அயோத்திதாசர் வலியுறுத்துகிறார்.

இ) இக்கால பெண்கள் எவ்வாறு தம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் உரிமையை பெற வேண்டும்?

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2X3=6

42. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

43. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

44. வேற்றுமை அணி என்றால் என்ன?

பிரிவு – 4

அடிபிறழாமல் எழுதுக. 2+3=5

45. 'இதனை' – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

46. "கற்றோர்க்குக்" எனத் தொடங்கும் கல்வி அழகே அழகு பாடலை எழுதுக. (அல்லது)

"படமாடக் கோயில்"- எனத் தொடங்கும் ஒன்றே குலம் பாடலை எழுதுக.

பிரிவு – 5

கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. 3X6=18

47. விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

48. அ) உழவுத் தொழில் சிறக்க இன்றியமையாதனவாக நீங்கள் கருதுவன யாவை?

(அல்லது)

ஆ) கல்லாமை அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறட்பாக்களின் கருத்துகளை எழுதுக.

49. அ) திரு.வி.க குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்?

(அல்லது)

ஆ) ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் மக்களிடம் இருக்க வேண்டிய உயர்பண்புகள் யாவை?

பிரிவு – 6

கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. 2X8=16

50. அ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)

ஆ) குழந்தைகளின் பண்பு நலன்களாக 'பால் மனம்' கதையின் வழி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

51. அ) 'நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)

ஆ) 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற தலைப்பில் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை – நோய் வரக் காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner